**Starting Time : 4.28 p.m.**

**11.03.2026 <u>நிறைவேற்று மனு எண்.8/2016 இன் அசல் வழக்கு எண். 60/2013</u>**

**<u>ம.சா.1 திரு.இராமமூர்த்தி த/பெ. நாராயணசாமி.</u>**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1).** அசல் வழக்கை எனது அப்பாவும் ஆண்டாள் அம்மாளும் தான் தாக்கல் செய்தார்கள் என்றும், அதில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். ஆண்டாள் அம்மாள் காலமானபிறகு அவரது வாரிசு என்ற அடிப்படையில் நான் இந்த மனுவை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அசல் வழக்கை தாக்கல் செய்யும்போது சொத்து விவரத்தில் நான்கு பக்கமும் யார் யாருடைய பூமி உள்ளது என குறிப்பிட்டு வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது, ஆனால் 51 சென்ட்டிற்கு வழக்கு தாக்கல் செய்தார்கள்.

**2).** வழக்கில் சொல்லியுள்ள அயிட்ட சொத்துக்களில் எங்களுக்கு சேர வேண்டிய பொதுவில் என குறிப்பிட்டு தான் சொத்து விவரம் காட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளபடி எங்களுக்கு சேரவேண்டிய பாகம் போக மீதி உள்ள பாகங்கள் வேறு ஒரு பாகஸ்தருக்கு செல்லவேண்டியது என்றும், அதை தான் இந்த எதிர்மனுதாரர்கள் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரர்கள் வாங்கியுள்ள கிரயம் உண்மையான கிரயம் என்றால் சரிதான். அசல் வழக்கில் நீதிமன்றத்தில் தீர்ப்பான பிறகு எங்களுக்கு சேரவேண்டிய பாகத்தை பிரித்துக் கொடுக்குமாறு நீதிமன்றத்தில் மனு ஏதேனும் தாக்கல் செய்தோமா என்றால் எனது அப்பா தான் இந்த மனுவை தாக்கல் செய்தார், எனக்கு வழக்கின் கோப்புகளை பார்த்தால் தான் தெரியும்.

**3).** எதிர்மனுதாரர்கள் அவர்களின் 5 சென்ட்டிற்கு மட்டும் தான் உரிமை கோருகிறார்கள் என்றால் சரிதான், ஆனால் எங்களுடைய 10 சென்ட் சொத்தையும் சேர்த்து அவர்களே பத்திரம் எழுதி பதிவு செய்துக்

கொண்டார்கள். மேற்படி எதிர்மனுதாரர்கள் எழுதிய 10 சென்ட் சொத்தினை பொறுத்து செல்லாது என பரிகாரம் கோரி நீதிமன்றத்தில் வேறு வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ளோம். எதிர்மனுதாரர்கள் தற்போது கொட்டகை அமைத்துள்ளதாக சொல்லப்படும் இடம் 5 சென்ட்டிற்குள் தான் வரும் என்றால் சரியல்ல, எங்களது சொத்தையும் சேர்த்து கொட்டகை அமைத்துள்ளார்கள். எதிர்மனுதாரர்களின் கிரயத்தை எதிர்த்து நாங்கள் எதிர் வழக்கு செய்யவில்லை என்றால் சரிதான்.

4). எதிர்மனுதாரர்கள் கிரயம் பெற்ற வருடம் 2008 என்றால் சரிதான். 2008ல் இருந்து எதிர்மனுதாரர்கள் தான் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2008லேயே எதிர்மனுதாரர்கள் சொத்தை கிரயம் பெற்று அனுபவித்து வரும்பட்சத்தில், 2014ல் தான் அசல் வழக்கில் தீர்ப்பு வந்தது என்றால் சரிதான்.

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

**Ending time : 4.44 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.